விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 14 வெள்ளிக்கிழமை (29.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 10

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ஊரடங்குச் சட்ட நேரம் இன்றிலிருந்து மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் இன்று முதல் மேலும் இரண்டு மணி நேரத்தால் அதிகரிப்படவுள்ளது.

இதன்படி இன்றிலிருந்து இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகப் பலாலி இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் இரவு 9 மணிமுதல் அதிகாலை 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சாவகச்சேரியில் கிளைமோர் இரண்டு இராணுவத்தினர் பலி

### மேலும் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்றுப் பிற்பகல் 1.10 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாய மடைந்தனர்.

கனரக வாகனம் ஒன்றில் பயணம் செய்த இராணுவத்தினரை இலக்கு வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தேசியப் பாதுகாப்புத்தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் காயமடைந்த இருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்புப் பனிச்சங்கேணி இராணுவ (04 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் இன்று ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இன்று முழு நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு 9மணிக்கு பிறபிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரும் வரை அப்பகுதியில் அமுலில் இருக்கும் என பலாலி இராணுவப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இன்றிலிருந்து இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும்

## வலைப் பின்னலில் கோளாறு டயலொக் சேவை செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

வலைப் பின்னலில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக டயலொக் தொலைபேசிச் சேவைகள் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருத்தும் பணிகள் பூர்த்தியடைந்ததும் அனைத்துச் சேவைகளும் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகலிலிருந்து டயலொக் சேவைகள் செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



## பிரதமர் ரட்ணசிறி அழைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் இணைந்து நாட்டின் சுபீட்சத்துக்காகச் செயற்பட முன்வர வேண்டும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். அரசாங்கம் சமாதான முயற்சிகளை இன்னமும் கைவிடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்றுக் காலை அம்பாந்தோட்டை சிறிகோபுர புதிய நகரில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண இளைஞன் திருமலையில் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை வரோதியா நகரையண்டிய பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் பின்புறமாகக் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை பாலையூற்றில் வசித்து வருபவருமான மகேந்திரன் கிரிதரன் (வயது-17) என்பவரது சடலம் என அடையாளம் காணப்பட்டது. (ச)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் மீளாய்வு செய்யப்படவுள்ளது

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதல்களை அடுத்து இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது பணிகளை மீளாய்வு செய்யவும் மீள ஒழுங்குபடுத்தவும் தீர்மானித்துள்ளது.

இதற்கான செயன்முறைக் கூட்டத்தை விரைவில் கூட்ட முடிபு செய்துள்ளதாகவும் தமக்கு வழங்கப்பட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த முடியுமா? என்று தீர்மானிக்க வேண்டியவர்களாகவுள்ளோம் என்றும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தம் கையெழுத்திடப்பட்டும் அதனைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டும் ஐந்தாண்டுகள் முடிபடையும் நிலையில் அதை (04 ஆம் பக்கம் பார்க்க)

## வெருகல் முருகன் கோவில் வான் தாக்குதலுக்கு இலக்கு

(திருகோணமலை)

திருகோணமலை ஈச்சிலம்பற்று வெருகல் முருகன் கோவில் மீது வான்படையின் கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. நேற்றுக் காலை 9 மணியளவில் 2 கிபீர் விமானங்கள் முருகன் கோவில் மீது 9 குண்டுகளை வீசியுள்ளன. கோவில் கட்டடம் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் அருகில் உள்ள கடைகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாகரையும் திருகோணமலையையும் இணைக்கும் வெருகல் பாதையையும் இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையேயான எல்லைப் பிரதேசமான வெருகல் பிரதேசத்தில் பிரசித்தித்தி பெற்ற வெருகல் முருகன் கோவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ-5)

## புளொட்டின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் புத்தளத்தில் கடத்தல்

(புத்தளம்)

புத்தளத்தில் நேற்று முன்தினமிரவு 8.30 மணிக்கு புளொட் அமைப்பின் இரு முக்கிய உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள்.

புளொட் அமைப்பின் தலைமைப்பீடத்தில் இருக்கின்ற பாக்கியராஜா, தலைவர் ராஜபாமா என்றழைக்கப்படுபவரும் ஹரிகாலன் என்ற அவரது உதவியாளரும் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வீட்டிலிருந்த சமயம் நான்கு பேர் ஆயுதங்களுடன் வந்து தாங்கள் பொலிஸ் நிலையத்திலிருந்து வருவதாகக் கூறி வீட்டைச் சோதனையிட வேண்டுமெனக் கூறியிருக்கின்றார்கள்.

கூறிவிட்டு அங்கிருந்தவர்களில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை நோக்கி ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் நேற்றும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் எறிகணை வீச்சுக்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை விடுதலைப்புலிகளினால் ஏவப்பட்ட ஏறிகணைகள் பனிச்சங்கேணியிலுள்ளஇராணுவ முகாம்கள் மீது வீழ்ந்து வெடித்ததில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டுள்ளதோடு மேலும் 3 இராணுவ சிப்பாய்கள் காயமடைந்துள்ளதாக இராணுவத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் கதிரவெளி பிரதேசத்தில் இலங்கை விமானப் படையினரால் 3 தடவைகள் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக விடுதலைப்புலிகள் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## ஜோர்தான் கப்பலை மீட்கும் முயற்சிக்கு உதவ முடியாது என நோர்வே தெரிவிப்பு

### சம்பந்தப்பட்டவர்களுடன் பேசுமாறு ஆலோசனை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பர்ஹ- 3 கப்பலை மீட்பதற்கு தம்மால் உதவ முடியாது என நோர்வே அரசு தெரிவித்துள்ளது.

கப்பலை மீட்பது குறித்து இலங்கை அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் தொடர்பு கொள்ளுமாறு ஜோர்தான் அரசுக்கு நோர்வே ஆலோசனை வழங்கியுள்ளது.

14 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியுடன் இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்த ஜோர்தான் கப்பலான பர்ஹ-3; இயந்திரக் கோளாறு காரணமாக முல்லைத்தீவுக் கடலை நோக்கி கரை ஒதுங்கியது.

இதன்போது அக் கப்பல் தரை தட்டிபழுதடைந்த நிலையில் விடுதலைப்புலிகளின் கடற்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது கப்பலை திருத்த வேலைக்காக கொழும்புக்கு எடுத்துவர உதவுமாறு ஜோர்தாஅரசு நோர்வேயைக் கோரியிருந்தது.

ஆனால்கப்பலை மீட்கும் முயற்சிக்குத் தம்மால் உதவமுடியாது எனவும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் நோர்வே ஆலோசனை வழங்கியுள்ளது.

இதனையடுத்து கப்பல் நிறுவனம் ஜோர்தான் அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. (ச-133)

# வடக்கு கிழக்கு மக்களின் வேதனைகளை மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டும்

## அகில இலங்கை இந்துமாமன்றம் பகிரங்க வேண்டுகோள்

வடக்கு கிழக்கு மக்களின் வேதனைகளை அனைத்து தரப்பினரும் மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டும் என அகில இலங்கை இந்துமாமன்றம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது. அவ்அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

இந்நாட்டின் தமிழ் பேசும் மக்கள்-குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள் - அனுபவிக்கும் சொல்லொண்ணாத்துயர் காரணமாக இந்தப் பகிரங்க வேண்டுகோளை விடுக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அகில இலங்கை இந்துமாமன்றம் இந்நாட்டில் இருக்கும் இந்து நிறுவனங்களின் ஒன்றியம் அதன் வருடாந்த கூட்டத்தில் இந்நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் கொழும்பிற்கு வந்து கூடிய எங்கள் எல்லோரின் சிந்தனைக்கும் வேதனை தரும் பிரச்சினையாக இருந்தது.

சமீபகாலமாக நடக்கும் குண்டு,ஷெல் வீச்சுகள் மற்றும் போர் நடவடிக்கைகள், கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல் செயல்கள் எங்கள் மக்களை பயங்கரமான நிலைக்குத் தள்ளியுள்ளன. யுத்தத்தாலும் பலாத்கார நடவடிக்கைகளாலும் பாதிக்கப்படிருக்கும் எமது சகோதர சகோதரிகளின் நிலை இப்பாதிப்பின் பலனாக பலர் பட்டினியாலும் மற்றும் வேதனை தரும் முடிவுகளையும் எதிர்நோக்கியுள்ளனர். மாமன்றத்தின் அங்கத்துவ சங்கங்களின் பேராளர்களில் சிலர் இந்த வருடாந்தக் கூட்டத்தில் போக்குவரத்து பிரச்சினை காரணமாக சமுகமளிக்கவும் முடியவில்லை.

யுத்த நிறுத்தத்தை முழுமையாக அமுல் நடத்தி சகல இராணுவ நடவடிக்கைகள் பலாத்காரச் செயல்களையும் நிறுத்தப்பட்டு எமது சகோதர சகோதரிகளின் துயரங்கள் உடனே முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் நிலையான- என்றும் நிலைக்கும் நியாயமான அரசியல் தீர்வைக் காணக்கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவித தாமதமுமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மனிதாபிமான அடிப்படையில் இம்மக்களின் வேதனைகள் அணுகப்பட வேண்டும். என்பதனையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

யுத்த நிறுத்த நடவடிக்கை முழுமையாக அமுல்படுத்த வேண்டும், ஏ-9,ஏ-15 பாதைகள் உடன் திறக்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு மக்களை தொடர்ந்தும் புறக்கணிக்காது அந்த மக்களுக்கு அவசியமாகத் தேவையான உணவுப் பொருட்கள் மருந்துவகை உட்பட சகலவற்றையும் அனுப்பவும் கல்வி மற்றும் அத்தியாவசிய வசதிகளை வழங்கவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றும் அவற்றை உடன் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்த விரும்புகிறோம்.

மீண்டும் பாரெல்லாம் பரவியிருக்கும் இந்து நிறுவனங்களையும் இந்து மக்களையும் எமது சகோதர சகோதரிகளின் பிரச்சினைகளில் அக்கறை எடுத்து உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம். (ச)

# அடுத்து செல்லும் கப்பலில் அரச ஊழியர்கள் மட்டும்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களை அடுத்த கப்பலில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிமாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்களின் விபரங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அடுத்து செல்லும் கப்பலில் அரச ஊழியர்கள்,மாணவர்கள் மட்டுமே பயணம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கான பதிவுகள் நேற்றையதினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-1)

# வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளையின் பணிக்காலத்தை நீடிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்ற வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளையின் பணிக் காலத்தை நீடிக்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி வைத்திய அதிகாரி இவ்வருடத்திற்குள் ஓய்வு பெற்றுச் செல்ல இருந்த நிலையில் இவரது சேவை மேலும் தொடர வேண்டும் எனக்கோரி அப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

இந்த நிலையில் அம்மக்களது கோரிக்கைக்கு இணங்க வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளையின் ஒப்புதல் கடிதத்தைப் பெற்று அவரது பணிக்காலத்தை மேலும் நீடிப்பதற்கான ஒழுங்குகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ச)

# பொங்கலுக்கான பொருள்கள் எடுத்துவர நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் பண்டிகைக்கான உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விரைவாக அப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப் பொருள்களுடன் பொங்கலுக்குத் தேவையான பானையை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணத்தில் பானையை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சமூக சேவைகள் அமைச்சுக் கேட்டுள்ளது. (ச-133)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பாடப் புத்தகங்களும் கற்றல் சம்பந்தமான உபகரணங்களும் கொள்வனவு செய்யும் பொருட்டு 2 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இந்து கலாசாரத் திணைக்கள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் சுமாராக 300 ஆசிரியர்கள் இக் கொடுப்பனவைப் பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ் இந்து அறநெறிப் பாடசாலை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.செயலகத்தில் இந்து கலாசாரத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார். (ச-133)

# சட்டக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம்

(கொழும்பு)

சட்டக்கல்லூரி அனுமதி மறுக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் கொழும்பு சட்டக் கல்லூரிக்கு வெளிப்புறத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் உயர் பாதுகாப்பு பகுதிக்குள் இவர்களது போராட்டம் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் இதையும் மீறி இவர்கள் போராட்டத்தை மேற்கொண்டால் வலுக்கட்டாயமாக அகற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விகிதாசார அடிப்படையில் அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் இன,மொழி,சமய சார்பில் பக்கச் சார்பாக அனுமதியளிக்க கூடாது எனவும் சட்ட உதவி ஆணையத்தை கோரி மாணவர்கள் அதன் முன் பதாதைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு சென்ற மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் அவர்களது அபிலாசைகளை கேட்டு அறிந்துள்ளார்.

சட்டக்கல்லூரி பரீட்சையில் 10 ஆயிரம் மாணவர்கள் தோற்றியதாகவும் இதில் 3ஆயிரம் மாணவர்கள் தமிழர்கள் எனவும் இப்பரீட்சையில் 240ற்கு மேற்பட்டோர் சிங்கள மற்றும் ஆங்கில மூலமான கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டதாகவும் இதில் ஓரிருவர் மாத்திரமே தமிழர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் நடைமுறை தொடருமானால் இன்னும் சில வருடங்களில் தமிழ் மூல சட்டத்தரணிகள் எவருமே இருக்கமாட்டார்கள் என போராட்டத்தில் ஈடுபட்ட மாணவன் கருத்து தெரிவித்தார்.

இவர்களின் போராட்டம் நேற்று மதியம் 3 மணிவரை இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# ஐந்து புதிய பஸ்கள் யாழ்.அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போக்குவரத்து சேவைகளுக்காக லங்கா முடித்த கப்பல் மூலம் நேற்று ஐந்து புதிய பஸ் வண்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜாதிக சபய வேலைத்திட்டத்தின் கீழ் இந்த பஸ் வண்டிகளும் அதற்கான உதிரிப் பாகங்களும் அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் பிரதிநிதிகள் யாழ்.மக்கள் அரச அதிபருடன் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து பஸ் வண்டிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு போக்குவரத்து சேவைகளுக்காக சுமார் 100 பஸ் வண்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இதேவேளை அடுத்த வருடம் முதல் யாழ். மக்களுக்கு தேவையான பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-133)

# இரு இளைஞர்கள் மன்னாரில் கடத்தல்

(மன்னார்)

மன்னார் நகரப்பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் புகுந்து 4 தமிழ் இளைஞரை இனந்தெரியாதோர் கடத்திச் சென்றுள்ளனர்.

அவர்களில் இருவரை சற்று நேரத்தில் விடுதலை செய்துள்ள அவர்கள் மற்றைய இருவரையும் இன்னமும் விடுவிக்கவில்லை எனவும் அவர்கள் ராசநாயகம் ஜெயசேகர். ஒரு பிள்ளையின் தந்தையான பிரான்சிஸ் துரைராஜ் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவர்களது உறவினர், பெற்றோர் நேற்றுக் காலை பொலிஸ் நிலையத்திலும் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவிலும் பிரதேச மனித உரிமைகள் அலுவலகத்திலும் மற்றும் மன்னார் ஆயரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர். (எ)

# சண்டே லீடர்ஆசிரியரை கைது செய்ய முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனதும் தனது குடும்பத்தினரின் பாதுகாப்பிற்காக இரகசியமாக அமைத்து வரும் 400 மில்லியன் ரூபாய் செலவிலான பதுங்கு குழி தொடர்பான தகவல்களை வெளியிட்டதற்காக சண்டே லீடர் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவை கைது செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சு குற்றப் புலனாய்வுத்துறையை பணித்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கை தொடர்பான தகவல்களை குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் லசந்த விக்கிரமதுங்காவிடம் தெரிவித்துள்ளனர். இந்த தகவலை அறிந்த ஊடகவியலாளர்கள் சண்டே லீடர் பத்திரிகை காரியாலயத்தை நேற்று சூழ்ந்து கொண்டனர்.

அரசினால் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்பு தடைச்சட்டமும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளும் இலங்கையில் கருத்து சுதந்திரத்தை மிகவும் பாதிக்கும் என்று சுதந்திர ஊடக அமைப்பு அண்மையில் குற்றம் சாட்டியிருந்தது. (எ)

# வடமராட்சியில் கிரனைட் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மடத்தடிச் சந்தியில் இராணுவத்தினரை இலக்கு வைத்து கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மாணவன் ஒருவன் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் ஜெயசிங்கம் ஈழவேந்தன் (வயது-19) என்ற மாணவனே காயமடைந்தவராவார். (எ)

> பிறரிடத்து அன்பும் சகிப்புத் தன்மையும் காட்ட வேண்டுமேயன்றி பழிவாங்கும் போக்குக் கூடாது.
>
> -டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# இந்திய வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கும் வர வேண்டும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி எதிர்வரும் ஜனவரி எட்டாம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கை வரும் அவர் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இலங்கை இனவிவகாரத்தில் தலையிடுமாறு கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா தலையிடும் என உறுதியளித்திருந்தார்.

அதேநேரம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்தியரசு தலையிட வேண்டுமென தமிழக சட்டசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அதன் நகல் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

இதற்குப் பதிலளித்த தமிழக முதல்வர் கலைஞர் கரு ாநிதிக்குக் கடிதம் அனுப்பிய சோனியா காந்தி இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடியா த் தீர்வு காணுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தான் கேட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இவ்விதம் இலங்கை விவகாரம் குறித்து இந்தியாவில் வெளிவந்த செய்திகளின் மத் ியில், அ த ஆண்டின் முதல் வாரத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை வருவது ஓர் புதிய திருப்புமுனை என்றே கூறவேண்டும்.

அணிசாரா நாடுகளின் கூட்டத்திற்கான அழைப்புடன் பிரணாப் முகர்ஜி இலங்கை வந்தாலும் ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர்-ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வி கண்ட பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருவது முக்கிய நிகழ்வாகவே கருதப்படும்.

எனினும் இலங்கை இன விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையிட மாட்டாது என செய்தியாளர்களிடம் தெரிவித்தவர் அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

இலங்கை விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கின் கொள்கைக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் முகர்ஜியின் கொள்கைக்கும் இடையே கருத்து வேற்றுமையிருப்பது இதிலிருந்து தெரிகின்றது.

ஆயினும் ஒரு நாட்டின் வெளியுறவு குறித்து அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் முக்கியமானவர் என்ற வகையில் அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைப்பது தவிர்க்க முடியாததே.

இருப்பினும் இலங்கைக்கு வருகைதரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் அதேநேரம், அவர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து மக்கள்படும் அவலத்தை நேரில் அவதானிப்பது அவசியமாகும்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர் பிரணாப் முகர்ஜி சந்தித்துப் பேச்சு நடத்துவது உண்மை நிலையைக் கண்டறிவதற்கு பேருதவியாக அமையும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு தொடர்பிலான வரலாற்றுப் பாதையில் பல்வேறு பள்ளம் திட்டிகளைக் காண முடியும்.

ரமேஸ் பண்டாரி என்ற இந்திய விசேட தூதுவர், இலங்கை அரசின் விருந்தில் மயங்கி கையுறை பெற்றுக் கொண்டு ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்தார் என்ற செய்தியை இலகுவில் மறந்து விட முடியாது.

எனவே இந்தியாவிலிருந்து இலங்கை விவகாரம் தொடர்பாக யார் இலங்கைக்கு வந்தாலும் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் வந்து போவது உண்மை நிலையை அறிவதற்கும் பொய்யுரைகளை வெட்டுவதற்கும் உதவுவதாக அமையும்.

எனவே எதிர்வரும் எட்டாம் திகதி இலங்கைக்கு வருகைதரும் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்து தமிழ் மக்களின் அவல வாழ்வை நேரில் அவதானிக்க வேண்டும்என்பதே தமிழர்களின் பெருவிருப்பாகும்.

# சம்பூரில் மின் நிலையம் அமைக்கும் முயற்சிக்கு கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

சம்பூரில் அவசர அவசரமாக அனல் மின்நிலையத்தை நிறுவ அரசு மேற்கொண்டு வரும் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்காமல் அரசு எடுத்திருக்கும் இத்தீர்மானம் பிழையானது என்றும் தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்காகவே அரசு இவ்வாறு செயற்படுகிறது என்றும் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கருத்துக் கூறுகையில்,

11 ஆயிரம் தமிழ் மக்கள் வாழ்ந்த இடம் சம்பூர் அந்த மக்களைத் திட்டமிட்டு விரட்டி விட்டு அந்த இடத்தை அரசு ஆக்கிரமித்துள்ளது.

விரட்டப்பட்ட மக்கள் இப்போது அகதி முகாம்களில் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் மீண்டும் சம்பூரில் வந்து குடியேறாதவாறு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதற்காகவே அவசர அவசரமாக அங்கு அனல் மின்நிலையத்தை நிர்மாணிக்க அரசு தீர்மானித்துள்ளது. அரசு பொருத்தமில்லாத நேரத்தில் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

இத்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன் அரசு எம்மிடம் கலந்தாலோசித்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை காயப்பட்ட தமிழ் மக்களின் துயரை ஆற்றுவதற்குப் பதிலாக அவர்களை மேலும் மேலும் காயப்படுத்தவே அரசு முனைகிறது.

அரசின் இத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி அரசு உடனடியாக மீள் பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-1)

# புலிகள் மீதான தடையை விலக்க பிரித்தானிய அரசிடம் கோரிக்கை

பிரித்தானிய அரசாங்கத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரி ஆளும் தொழில்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் வர்த்தகர்கள் கூட்டமைப்பு அலுவலர்களும் மனு கொடுத்துள்ளனர்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் யுனிசன், ஆர்.எம்.ரி.சிடபிள்யு போன்ற பல வர்த்தக சங்கங்களும் இம்மனுவில் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் தமிழ் மக்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை மேற் கொண்டுள்ளது. தமிழ் மக்கள் இரு தசாப்தங்களுக்கு மேலாக சுயநிர்ணய உரிமைக்காக போராடி வருகின்றனர். சிங்கள மக்களால் 2005 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடிக்கடி மீறி வருகிறார்கள். குறிப்பாக வான் வெளித்தாக்குதல்கள் மேற்கொள்கிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் அரசாங்கம் மேற்கொண்ட வான் தாக்குதலில் 50 செஞ்சோலை சிறார்கள் கொல்லப்பட்ட தாக அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போருக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாவதாகவும் கடந்த நவம்பர் மாதம் 9ம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜ ரவிராஜ் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அம் மனு நீண்டு செல்கிறது. (எ-1)

# பல்கலைக்கழக செயற்பாடுகள் ஜனவரி எட்டு முதல் ஆரம்பம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.குமாரவடிவேலுக்கும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர்.ஜெனரல் சந்திரசிறிக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பினையடுத்து இம்முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக பலாலி இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.குமாரவடிவேலை யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நேற்று முன்தினம் பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார். பேராசிரியர் ஆர்.சிவச்சந்திரன், பேராசிரியர் கே.கந்தசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர். 2007ஆம் வருட கல்வி சம்பந்தமாக மீண்டும் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்து அங்கு நடவடிக்கைகள் உரிய முறையில் நடாத்துவது தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்தது.

யாழ்ப்பாணத்திற்கு வெளியில் உள்ள வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலையைச் சேர்ந்த 800 மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் மூன்றாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, இறுதியாண்டு மாணவர்களையும் முதல் தடவையிலும் முதலாம் வருட மாணவர்களையும் இரண்டாம் வருட மாணவர்களை இரண்டாம் தடவையிலும் கப்பல் மூலம் பயணம் செய்ய உரிய நடவடிக்கைகள் செய்து தருமாறு யாழ் தளபதிக்கு தெரியப்படுத்தியும் அதற்கு தலைமையகத்தின் அனுமதியை பெற்றுக் கொண்டதும் அதற்குரிய சகல நடவடிக்கைகளையும் செய்து தருவதாக இராணுவத்தளபதி தெரிவித்தார்.

இங்கு முதலாவது குழுவினருக்கு தை மாதம் 8ம் திகதியும் இரண்டாம் குழுவினருக்கு தை மாதம் 22ம் திகதி பல்கலைக்கழகம் ஆரம்பிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதைவிட பல்கலைக்கழக மாணவர்களின் இருப்பிட வசதிகள், உணவுத் தேவைகள் பற்றி யாழ்.அரசாங்க அதிபரினால் பெற்றுக் கொடுக்க இணங்கிக் கொண்டதாக தளபதியிடம் தெரிவிக்கப்பட்டது. (ஏ)


# உள்ளூர் உற்பத்திக்கு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சவர்க்கார வகைகள் மற்றும் ரொபி உற்பத்திகளை மீள உடன் ஆரம்பிப்பதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டில் சவர்க்கார வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் உள்ளூர் சவர்க்கார உற்பத்தியை உடன் ஆரம்பிக்க அதற்குரிய பொருட்களை உடன் வழங்குமாறு யாழ்.அரச அதிபருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார். (ச)

# ஆதார வைத்தியசாலையின் அபயகரம் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை



(யாழ்ப்பாணம்)

பல்லாயிரம் மக்களின் உள்ளம் கவர்ந்த உத்தமர் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை அவர்களுக்கு நன்றிக் கடன்பட்ட சமூகம் எடுக்கும் பிரிவுபசார விழா ஊன் உறக்க மின்றி மனித நேயப் பணி செய்த மகத்தான மனிதன் இவர். வைத்தியத்துறையில் நாற்பத்தாறு ஆண்டுகள் ஓய்வின்றி உழைத்தவர்.

சட்டவைத்திய அதிகாரியாக விளங்கி இறந்தவர் நிலையையும் இரக்கத்தோடு ஆராய்ந்து தொண்டாற்றியவர். போரின் அவலத்திலும் இயற்கையின் சீற்றத்தால் பல்லுயிரும் பறிபோன கடற்கரையிலும் நள்ளிரவு என்றும் பாராமல் நடமாடி நடமாடித் தன்பணி செய்த தகைமையாளன். தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியோடு மந்திகை வைத்தியசாலையை மக்களுக்கு உதவிட செயற்கரும் சேவைகள் ஆற்றிய செயல்வீரன். தன்இனிய மனையாளை இழந்து தவித்த போதும் தன் அருமைப் பிள்ளைகள் நால்வரும் பிறதேசம் அழைத்த போதும் பொது மக்களுக்கு பணி செய்வதற்காக தன் சுயநலங்களை விட்ட கர்மவீரர். இத்தகைய சான்றோரை இன்றைய சூழலில் நாம் காண்பது அபூர்வம். நாம் செய்த நல்வினைப் பயனால் இப் பெருமகனின் ஆற்றுப்படுத்தலில் பணி செய்யும் பேறு பெற்றுள்ளோம்.

ஆன்மீகப் பணி ஆயுளைக் காக்கும் பணி. ஆதரவற்றவர்களுக்கு உதவும் பணியென எத்தனை பணிகளை செய்த ஒப்புரவாளர் வைத்தியகலாநிதி ஐயாவை வணங்குகின்றோம். வாழ்த்துகின்றோம். அரசு உங்களுக்கு ஓய்வு தந்தாலும் உங்கள் அபயகரங்கள் என்றும் ஓயாது என்ற உறுதியோடு வாழ்த்துகிறோம். பல்லாண்டு பல்லாண்டு நீவீர் வாழ்க! பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உங்கள் ஆதரவை என்றும் போற்றும்.

*நன்றிக்கடன்மிக்க,*

*வைத்தியர்கள், தாதியர்கள், ஆர்வலர்கள்,*

*ஊழியர்கள், பணியாளர்கள்*

*பருத்தித்துறைஆதாரவைத்தியசாலை.*

# திருமலை கடற்படைத் தளத்தில் பாதுகாப்புச் சபை கூடியது!

(திருகோணமலை)

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக நாட்டின் தேசியப் பாதுகாப்புச்சபை திருகோணமலை கடற்படைத்தலைமையகத்தில் கூடியது. இரண்டரைமணி நேரம் நடை பெற்ற இந்தக் கூட்டத்திற்கு நாட்டின் முப்படையின் தளபதியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை வகித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட , விமானப் படைத் தளபதி றொசான் குலதிலக்க மற்றும் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருகோணமலைக் கடற்படைத் தளத்திற்கு விமானப் படையின் உலங்கு வானூர்தி மூலம் நேற்று முன்தினம் திடீரெனச் சென்ற மகிந்தவை அண்மையில் அங்கு பயிற்சியை ஆரம்பித்துள்ள அவரது இரண்டாவது புதல்வர் ஜோசித ராஜபக்ஷ மரியாதை செலுத்தி வரவேற்றார்.

கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தை அங்கு கூட்டினார். அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அவர்,

வழமை போல நாடு பிளவுபட நான் அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியதுடன் கடற்படையின் முக்கியத்துவம் குறித்துப் பேசியதுடன் அதனைக் கட்டி எழுப்ப சிங்களப் பெற்றோர் முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் திருகோணமலைக்குச் சென்றிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கும் திட்டங்களை மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மோகன் விஜயவிக்கிரம அறிவித்த பின்னர் மகிந்த திருகோணமலைக்குச் சென்றிருக்கின்றார்.

மகிந்தவின் வரவை முன்னிட்டு இராணுவத்தினரும் கடற்படையினரும் தமிழ் மக்கள் செறிவாக வாழும் நகரப்பகுதிகளில் வீடுவீடாகச் சோதனைகளை நடத்தினர்.

சைக்கிள்கள், கார்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் லொறி வாகனங்களை நகர வீதிகளில் நிறுத்துவதற்குத் தடை விதித்திருந்தனர்.

பயணிகள் பேருந்துகள் சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்டு படையினராலும் காவற்துறையினராலும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டன எனத் தெரியவருகின்றது. (ச-5)

# பொருளாதார நிபுணர் சபை ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

இலங்கை பொருளாதாரம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கான சிறப்பு நிபுணர்கள் சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சபை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

இந்த சபையில் பேராசிரியர் லக்ஷ்மன், பேராசிரியர் புத்திக்க ஹெட்டவிதாரன, டாக்டர் சமன் கெலிகம, லொயிட் பெர்னாண்டோ, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், உதவி ஆளுநர் ராணி ஜயமகா தேசிய திட்டமிடல் பொது அதிகாரி அபேகுணவர்த்தன நெடுஞ்சாலைகள் செயலாளர்அமர சேகர மற்றும் கம்பொல போன்றோர் அங்கம் வகிக்கிறார்கள்.

இச்சங்கம் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் செயற்படும் எனவும் மாதத்திற்கு இரு தடவைகள் கூடும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி உரையாற்றுகையில் 2007ம் ஆண்டு பாதீட்டில் குறுகிய காலம், மத்திய காலம் மற்றும் நீண்ட கால நோக்கில் நாட்டின் பொருளாதாரத்தை எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு பொருளாதார நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் வழிநடத்தப் போவதாக தெரிவித்துள்ளார். (ச)


PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம்:-08-01-2007

| Course | Duration |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DEST TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |

CERTIFICATE COURSES

1. MS WORD-2000
2. MS EXCEL-2000
3. MS ACCESS-2000
4. MS POWER POINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d BASE III+
8. PAGE MAKER
9. WINDOWS 95
10. COREL DRAW
11. D BASE FOR WINDOWS
12. PHOTO SHOP DELUX
13. ADOBE PHOTO SHOP
14. QUICK BOOK

EACH 3 MONTHS

| பயிற்சி | காலம் |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 2. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3. மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & diesel வாகனங்களின் இலகுவான செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 4. ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5. வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (Oscilloscope) (அசைவுகாட்டி) இனை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும்) | காலம் 8மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற் பயிற்சி (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 3 மாதங்கள் |
| 7. மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 8. மரவேலை (With use of Machinery) (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 9. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| 10. PLUMBING | காலம் 6 மாதங்கள் |
| 11. MASONARY | காலம் 6 மாதங்கள் |

குறிப்பு:

1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக்குரவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

REGISTRAR
PATRICIAN INSTITUTE
59, ST. PATRICK'S ROAD,
JAFFNA

T.P NO:021 222 6148 Fax :021 222 6148
E.Mail:SPitee@Slt net.lk


## வாகனத் தகுதிச் சான்றிதழ் 2007

2007 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்பட்டும் என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# பரீட்சார்த்திகளிற்கு புதிய நடைமுறை

க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி பத்திரங்களை கிராம சேவையாளர்கள் மூலமே உறுதிப்படுத்த வேண்டும் என பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சைகளின் போது இடம் பெறும் ஆள் மாறாட்டங்களை குறைப்பதற்கே இவ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார் (ச-5)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி குருக்கள் மடம் பகுதியில் இளைஞன் ஒருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குருக்கள்மடப் பகுதியில்வீதியோரத்தில் நின்ற இளைஞன் மீது அப்பகுதியால் வந்த சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் சுட்டுக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(ச)

## புளொட்டின்...

இருந்த இவர்கள் இருவரையும் கடத்திச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கும் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-133)

## போர்நிறுத்தக்...

மீள ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் நடைபெறவுள்ளது.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கைகளால் போர்நிறுத்தம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வாகரையைக் கைப்பற்றப் போவதாகப் படைத்தரப்பு அறி வித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளை மேலும் இக்கட்டான சூழ்நிலைக்கு இட்டுச் செல்லும். வாகரைப் பகுதியில் பொது மக்கள் சந்தித்துவரும் நெருக்கடிகளும் இடப்பெயர்வுகளும் போர்நிறுத்தத்தை மிகவும் கடுமையாகப் பாதிக்கும் நிகழ்வுகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## சாவகச்சேரியில்...

காவலரண் மீது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் படைவீரர் ஒருவர் பலியானார். சம்பவத்தில் ஐந்து படை வீரர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா நெடுக்குளம் சுடுவேந்தப் பிளவுப் பகுதியில் நேற்றுப் பகல் 12.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காவல்துறைப் பொறுப்பதிகாரி காயமடைந்துள்ளார் என பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-133)

## அரசாங்கத்துடன்...

அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

நாட்டின் ஜனநாயகத்தையும் ஒருமைப்பாட்டினையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. அரசாங்கம் சமாதான முயற்சிகளை இன்னும் கைவிடவில்லை. நிரந்தரத் தீர்வைப்பெற்றுக் கொள்வதற்கு பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து அரசியல் தீர்வொன்றை எய்துவதற்கு விடுதலைப்புலிகளுக்கு விடுத்துள்ள அழைப்பில் எந்தவித மாற்றமும் கிடையாது.

நாட்டின் அபிவிருத்தியே அனைவரும் எதிர்பார்ப்பதாகும்.எனவே விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் இணைந்து நாட்டின் சுபீட்சத்துக்காக செயற்படமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை அம்பாந்தோட்டை சிறிகோபுர புதிய நகரில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சகல வசதிகளையும் கொண்ட 150 வீடுகளை மக்களுக்குக் கையளிக்கும்வகையில் இந்த வைபவம் இடம்பெற்றுள்ளது. ஆயுத பலத்தால் நாட்டின் ஒருபகுதியை நிர்வகிப்பதற்கு அரசாங்கம் எவருக்கும்இடமளிக்காது எனவும் அவர் கூறினார்.

பொதுமக்களைத் துன்புறுத்தி சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும். எனினும் ஒருபோதும் அரசாங்கம் யுத்தத்தைப் பிரகடனம் செய்யாது என்று அவர் வலியுறுத்தினார். (ச-133)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.